GODependence True freedom is being dependent on God

# செய்தி மடல்

ஆகஸ்ட் 2025



## உண்மையான சுதந்திரம்

**இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான்; குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார். ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள். யோவான் 8: 34-36**

தங்களுடைய விருப்பத்திற்கும் வசதிக்குமேற்ப, நினைத்ததை செய்து வாழக்கூடிய ஒரு வாழ்க்கை அமையுமானால் அதையே உண்மையான சுதந்திரம் என பலர் நினைக்கின்றனர். சுதந்திரம் என்ற வார்த்தையின் பொருள் நபருக்கு நபர் வேறுபடும். உண்மையைச் சொல்வதானால், ஒரு அடிமையாக இருப்பதை எவரும் விரும்புவதில்லை. ஆயினும், உலகமெங்கிலும் அடிமைத்தனத்தின் பழைய மற்றும் நவீன வடிவங்களை நாம் காண்கிறோம். இயேசுவிடம் பேசிய யூதர்களைப் போலவே, அநேகர் தாங்கள் ஒரு அடிமைத்தனத்தில் இருக்கிறோம் என்பதை ஏற்றுக்கொள்ளக்கூட தயாராக இல்லை என்பது வருந்தத்தக்கது ஆகும்.

இங்கு, யாரோ ஒருவருக்கு அடிமையாக இருப்பது ( அரசியல், பொருளாதார மற்றும் சமுதாய அடிமைத்தனம்) பற்றி இயேசு சொல்லவில்லை. பாவத்துக்கு அடிமையாக இருத்தல் பற்றி கூறுகிறார். இது ஒரு குறிப்பிட்ட பாவத்தை அல்ல, பாவ வாழ்க்கையைக் குறிக்கிறது. பாவத்திற்கு அடிமையாக இருத்தல் என்பது வேறெந்த அடிமைத்தனத்தைப் பார்க்கிலும் மிகவும் வேதனையானது ஆகும். ஏனெனில், இது நம் மனச்சாட்சியையும், உள்ளான மனிதனையும் பாதிக்கிறது. பாவத்துக்கு அடிமைகளாக இருப்பவர்கள் தேவனுடைய குடும்பத்தின் ஒரு அங்கமாக இருக்க முடியாது. அநேக நல்ல மனிதர்கள் பாவ சோதனைகளுக்கு இடம் கொடுத்து பாவ வாழ்க்கையில் சிக்கிக்கொள்கிறார்கள். கெட்டபழக்கவழக்கங்களைக் குறித்த விஷயத்தில், இதை நான் விட்டுவிட நினைக்கும்போது அல்லது நான் முடிவெடுத்துவிட்டால் உடனடியாக எளிதில் நிறுத்திவிட முடியும் என்று ஜனங்கள் சொல்வதுண்டு. ஆனால், எத்தனை வருடமானாலும் அவர்களில் ஒரு மாற்றமும் இருக்காது. ஏன்?

"பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்" என்று இயேசு சொல்கிறார். ஒரு பாவி தன் எஜமானனாகிய பாவத்திற்கு கீழ்ப்படியாமல் இருப்பதற்கு எவ்வித சுயாதீனமும் இல்லாதவராக இருக்கிறார். இன்று கிடைக்கக்கூடிய அனைத்து விதமான மருந்துகளில், எந்த மருந்தும் பாவத்தில் இருந்து விடுதலையைத் தரமுடியாது. குமாரன் நம்மை விடுதலையாக்குகிறார் என்று இயேசு சொல்கிறார். இயேசு நம்மை பாவ அடிமைத்தனத்தில் இருந்து விடுதலையாக்கி, நீதியின் ஊழியக்காரராக மாற்றுகிறார் (ரோமர் 6:22). இயேசு நம்மை பாவத்தில் இருந்து எப்படி விடுதலையாக்குகிறார்? "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்று அவர் சொல்கிறார் (யோவான் 8:32). இயேசுவே அந்த சத்தியம்.

வேதாகமத்தில் நாம் தேவனுடைய சத்தியத்தை வாசிக்கும்போது, நாம் இயேசுவைப்பற்றி அதிகம் அறிந்து கொள்கிறோம். அவர் நம்மை எவ்வித பாவ அடிமைத்தனத்தில் இருந்தும் விடுவிக்கிறார். "ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்." நீங்கள் இந்த விடுதலையை உங்கள் அனுதின வாழ்வில் பெற்று அனுபவிக்கிறீர்களா? தேவனால் கூடாத காரியம் எதுவுமில்லை. நீங்கள் இயேசுவை விசுவாசித்தால், தேவன் உங்களுக்குத் தருகிற சுதந்திரத்தில் நீங்கள் மகிழ்ந்து களிகூரமுடியும்.

**- சகோ. அற்புதராஜ் சாமுவேல், பெங்களூர்.**

### 🎯 எமது தரிசனம்

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

### 🎯 எமது பணித்திட்டம்

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ GODependence நாடுகிறது.

**தேவன் தான் மனதில் என்ன நினைக்கிறாரோ அதைத் தான் சொல்லுகிறார் என்ற எண்ணத்துடன் நாம் நமது வேதாகமங்களை வாசிக்கத் துவங்குவோமாக. - A.W. டோசர்**

# ஆசிரியரிடமிருந்து

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செய்திமடல் மூலம் மீண்டும் உங்களுடன் தொடர்பு கொள்ள தேவன் கொடுத்த இந்த வாய்ப்பிற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

கிறிஸ்தவ வட்டாரத்தில் ஆசீர்வாதம் என்ற வார்த்தை மிகவும் பரிச்சயமான ஒன்று. ஆனால் அதன் முழுமையான அர்த்தம் யாருக்கும் தெரிவதில்லை. அதன் உண்மையான அர்த்தம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கோணத்தில் வெளிப்படும்.

பாக்கியவான்(கள்) என்ற வார்த்தையை இயேசு கிறிஸ்துவின் மலைப்பிரசங்கம் உட்பட பரிசுத்த வேதாகமத்தின் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் பல இடங்களில் வாசிக்கிறோம். குறிப்பாக தமிழ் வேதாகமத்தில் பாக்கியவான் என்ற வார்த்தை 84 இடங்களில் வருகிறது. அவற்றில் 14 இடங்கள் நேரடியாக பரிசுத்த வேதாகமத்தை தொடர்பு படுத்தி உள்ளன. அந்தப் 14 வசனங்களையும் உற்று நோக்கினால் அது வெளிப்படுத்துதல் 1:3ல் சொல்லப்பட்டிருக்கிற சத்தியத்தை மையமாகக் கொண்டு உள்ளன. இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது.' (வெளி 1:3)

**வாசிப்பதின் ஆசீர்வாதம்:** இந்த தீர்க்கதரிசன வசனங்களை **வாசிக்கிறவன் பாக்கியவான்** என கூறி யோவான் ஆரம்பிக்கிறார். இது முதலாம் நூற்றாண்டில் மிகவும் முக்கியமான ஒன்றாகும், ஏனெனில் அன்று சபைகளுக்கு முன்னால் வேதவசனங்கள் சத்தமாக வாசிக்கப்பட்டன. அவ்விதம் வேதவசனத்தை வாசிப்பது என்பது ஒரு மரியாதை நிறைந்த செயலும், மற்றவர்களுக்கு அறிவிக்கும் செயலும் ஆகும். இன்று, நமக்கு வேதாகமத்தை அச்சு, டிஜிட்டல் மற்றும் ஆடியோ வடிவங்களில் முன்னெப்போதையும் விட எளிதான அணுகும் வாய்ப்பு உள்ளது; ஆனாலும் நாம் அதனைப் புறக்கணிக்கிறோம். ஆசீர்வாதம் என்பது வேதாகமத்தை சொந்தமாக வைத்திருப்பதில் அல்ல, அதைத் திறப்பதில் உள்ளது. ஒவ்வொரு முறை நாம் அதை வாசிக்கும்போது, தேவனுடைய குரலைச் சந்திக்கிறோம்; அது நம் கால்களுக்கு தீபமாகவும், நம் பாதைக்கு வெளிச்சமாகவும் இருக்கிறது (சங். 119:105). தேவனுடைய வார்த்தையை தினமும் நம்பிக்கையோடு வாசிப்பது என்பது, தினமும் நம்மை தெய்வீக ஆசீர்வாத மழையின் கீழ் நம்மை அமரச் செய்வதாகும்.

**கேட்பதின் ஆசீர்வாதம்:** இந்த வசனம் இவ்வாறு தொடர்கிறது, "...**இவற்றைக் கேட்கிறவர்களும்**...". கேட்பது என்பது நம் காதுகளில் வார்த்தைகளின் ஒலி நுழைவதை விட ஆழமானது—அது நம்பிக்கை, கவனம் மற்றும் நாம் கேட்பவற்றால் மாறும் விருப்பத்தோடு கேட்பதைக் குறிக்கிறது. ***"காதுள்ளவன் கேட்கக்கடவன்"** என இயேசு அடிக்கடி கூறினார். பலரும் சாதாரணமாகக் கேட்கிறார்கள், ஆனால் சிலர் மட்டுமே கவனத்தோடு கேட்கிறார்கள். உண்மையாக கேட்பது என்பது மரியாதையை உள்ளடக்கியது: தேவனுடைய வார்த்தையை சாதாரணமாக நடத்தாமல், ஜீவன் தரும் சத்தியமாக நடத்துவது. இந்த ஆவியில் வார்த்தை கேட்கப்படும்போது, அது நம்மைக் கண்டிக்கிறது, ஆறுதலளிக்கிறது மற்றும் வழிநடத்துகிறது.

இங்கு வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதம் பிரசங்கங்களையோ வேதவாசிப்புகளையோ பின்னணி சத்தமாகக் கேட்பவர்களுக்கல்ல, அவற்றை கவனமுடன் உள்வாங்கி மதித்துப் போற்றுபவர்களுக்கானது.

**கைக்கொள்ளுவதின் ஆசீர்வாதம்:** இறுதியாக யோவான் இவ்வாறு கூறுகிறார், "... **இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும்** பாக்கியவான்கள்." கீழ்ப்படிதலில்லாமல் வெறுமனே வாசிப்பதும் கேட்பதும் நம்மை ஆவிக்குரிய விதத்தில் மாற்றமடையச் செய்யாமல் விட்டுவிடும். வேதாகமத்துடன் நமது ஈடுபாட்டின் உண்மையான பரிசோதனை என்னவென்றால், அது நமது தெரிவுகள், முன்னுரிமைகள் மற்றும் தினசரி நடத்தையை மாற்றுகிறதா என்பதாகும். "கைக்கொள்ளுதல்" என்பது மனனம் செய்வதை விடவும் அதிகமானது; அது தேவனுடைய வார்த்தையை நம் இருதயங்களில் பாதுகாத்து, நடைமுறையில் கடைப்பிடிப்பதாகும். யோவான் நமக்கு நினைவூட்டுவது போல், **"காலம் சமீபமாயிருக்கிறது"** என்பதால், இந்த "கைக்கொள்ளுதல்" என்பது அவசரமான ஒன்று. தேவனுடைய வார்த்தை என்பது வெறுமனே கடந்த காலத்தின் பதிவேடோ அல்லது எதிர்காலத்தின் முன்னறிவிப்போ அல்ல—இது நிகழ்கால வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டியாகும். அவருடைய வார்த்தையைக் கைக்கொள்ளுகிறவர்கள், அவருடைய வருகைக்குத் தயாராக இருப்பதோடு, சமரசம் நிறைந்த உலகில் உண்மையுடன் வாழத் தகுதிப்படுத்தப்படுகிறார்கள்.

வெளிப்படுத்துதல் 1:3 ஒரு முப்படி நிலையிலான ஆசீர்வாதத்தை விவரிக்கிறது: அது கவனமுடன் தேவனுடைய வார்த்தையை வாசிப்பதும், நம்பிக்கையோடு அதனைக் கேட்பதும், கீழ்ப்படிதலோடு அதனைக் கைக்கொள்ளுவதும் ஆகும். கவனத்தை சிதறடிக்கும் இந்தக் காலத்தில், இந்த படிகள் நம்மை தேவனுடைய நித்தியமான சத்தியத்தில் நிலைப்படுத்தி, விரைவில் இருக்கும் அவரது வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்தட்டும்.

தேவனுடைய பெரிதான கிருபையால், நமது GODependence குழுவின் 3வது குடும்பக் கூடுகை 01 & 02 ஆகஸ்ட் 2025 ஆகிய நாட்களில் பெங்களூருவில் சிறப்பாக நடைபெற்றது. குழுவின் உறுப்பினர்களில் 18 பேர் தங்கள் குடும்பத்தினருடன் ஐக்கியம், ஆவிக்குரிய புத்தாக்கம் மற்றும் திட்டமிடலுக்காக பல்வேறு மாநிலங்களிலிருந்து ஒன்றுகூடினர். இந்த குடும்பக் கூடுகையில் கலந்து கொண்டு புதிய உற்சாகத்தோடு திரும்பி இருக்கின்ற குழுவின் உறுப்பினர்கள் தேவ பெலத்தினால் தங்களுடைய பணியை அர்ப்பணிப்போடு தொடர்ந்து செய்ய உங்கள் ஜெபங்களில் எங்களை நினைவுகூருங்கள்.

இந்த GODependence செய்திமடல் குறித்த உங்கள் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவிப்பதற்காக ஒரு கருத்துக் கணிப்புக்கான இணைப்பு பக்கம் 4 ல் கொடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் இதுவரையும் இந்த கருத்துக்கணிப்பில் பதிலளிக்கவில்லை எனில், பதிலளிக்க வேண்டுகிறோம்.

GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.



**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**

ஞானிகளுக்கு நட்சத்திரம் எப்படி இருந்ததோ அதே போல பரிசுத்த வேதாகமம் நமக்கு இருக்கிறது; ஆனால் கிறிஸ்துவிடம் வழிநடத்தப்படாமல், அதை உற்று நோக்குவதிலும், அதன் அசைவைக் கவனிப்பதிலும், அதன் சிறப்பைப் போற்றுவதிலும் நம் நேரத்தைச் செலவிட்டால், அதனால் கிடைக்கக்கூடிய நன்மையை நாம் இழந்துவிடுவோம். - தாமஸ் ஆடம்ஸ்



# மாய்மாலம்

சகோ. R. ஸ்டான்லி (BYM)

## 1 மாய்மாலத்தின் வரையறை

**1. சிந்தைக்கும் சொல்லுக்கும் முரண்பாடு**

“மாயக்காரரே! உங்களைக்குறித்து: இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து உதடுகளினால் என்னைக் கனம்பண்ணு கிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது” (மத் 15:7-8)

**2. சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடு**

“நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் (வேதபாரகரும் பரிசேயருமாகிய மாயக்காரர்) உங்களுக்கு சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில்- அவர்கள் சொல்லுகிறார்கள்- சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்” (மத் 23:2-3)

## 2 மாய்மாலத்தின் காரணிகள்

- 1. சுயநீதியும்- குற்றங்காணலும் (மத் 7:4-5; லூக் 6:42)
- 2. பிறர் பாராட்டுப் பிரியம் (மத் 23:27-28)
- 3. பொருளாசை (எசே 31:31; மத் 6:24)
- 4. அடிப்படைகளை விட்டு சிறிய காரியங்களை வற்புறுத்துதல் (மத் 23:23-24)
- 5. உள்ளான வாழ்க்கையைவிட புறம்பானவைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல் (மத் 23:25-26)

## 3 மாய்மாலம் காணப்படும் பகுதிகள்

- 1. ஆவிக்குரிய ஆராதனையில் (மத் 15:7&9)
- 2. சமூக உறவில் (எரே 9:8)
- 3. ஆத்மீக முயற்சிகளில் தர்மம்- ஜெபம்- உபவாசம் (மத் 6:2-5-16; சக 7:5-6)
- 4. அறிக்கையிலும்- பிரசங்கத்திலும் (தீத் 1:16; ரோ 2:21&23; சங் 50:16; மீகா 3:11)
- 5. தேவ வார்த்தைகளைக் கேட்பதில் (எசே 33:31-32)

## 4 மாய்மாலத்தின் கனிகள்

- 1. அழியும் நம்பிக்கை (யோபு 8:13&15)
- 2. தற்காலிக மகிழ்ச்சி (யோபு 20:4&9)
- 3. ஆன்மீக வளர்ச்சியில் தடை (1 பேது 2:1-2)
- 4. தேவனுடைய “ஐயோ” (மத் 23:13-14-15-23-25-27-29)
- 5. மரணமும் நரகமும் (அப் 5:1&11; யோபு 36:13-14; மத் 23:29-33; 24:51)

## 5 மாய்மாலத்தை மேற்கொள்ளுவதெப்படி?

- 1. தேவன் அறிவார் என்பதை உணருங்கள் (சங் 139)
- 2. தேவனுக்குப் பயந்திருங்கள் (2 கொரி 5:10&12)
- 3. உன்னதத்திலிருந்து வரும் பரிசுத்தத்தை நாடுங்கள் (யாக் 3:17)

சகோ. R. ஸ்டான்லி (BYM)
(திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கிற சிறுநரிகள் - Little Foxes என்ற நூலில் இருந்து எடுத்தாளப்பட்டிருக்கிறது)

**ஞானமுள்ளவர்களாவதற்கு வேதாகமத்தை ஆராய்ந்து பாருங்கள்; பாதுகாப்பாக இருப்பதற்கு அதை விசுவாசியுங்கள்; பரிசுத்தமாக இருப்பதற்கு அதை வாழ்க்கையில் கடைபிடியுங்கள். - பெயர் அறியப்படாதவர்**

## துதிப்போம்:

1. 2025 ஜூலை மாதம் இறுதியில் வேதவாசிப்பை நிறைவு செய்தவர்களுக்காக.
2. தங்களுடைய பெலவீனங்களின் மத்தியிலும் ஆண்டவருடைய தெய்வீக சுகத்தை அனுபவித்து வருபவர்களுக்காக.
3. 2025 ஆகஸ்ட் 1 மற்றும் 2 தேதிகளில் பெங்களூருவில் நடைபெற்ற GODependence குழுவின் குடும்பக் கூடுகை ஆசீர்வாதமாக இருந்ததற்காக.
4. சிறுவர் வேதவாசிப்பு குழுக்களில் இணைந்து உற்சாகமாய் வேதவாசிப்பிலும் வேத வசனங்களை மனனம் செய்வதிலும் ஈடுபட்டுவரும் பிள்ளைகளுக்காக.
5. GODependence ஊழியங்களில் ஈடுபட்டுவரும் ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் இம்மட்டும் கொடுத்திருக்கின்ற கிருபைகளுக்காக / பெலனுக்காக.

## ஜெபிப்போம்:

1. 2025 August மாதம் தொடங்கப்பட்டுள்ள வேதவாசிப்பு குழுக்களுக்காகவும், அதில் இணைந்து இருப்பவர்களுக்காகவும்.
2. GODependence குடும்பக் கூடுகையில் கலந்துகொண்டு புதிய உற்சாகத்தோடு திரும்பி இருக்கின்ற குழுவின் உறுப்பினர்கள் தேவபெலத்தினால் தங்களுடைய பணியை அர்ப்பணிப்போடு தொடர்ந்து செய்ய.
3. 2025 August மாதத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருக்கும் GODependence கருத்தரங்கிற்காக.
4. அநேக மாதங்களாக வேத தியான குழுக்கள் தொடங்குவதில் இருக்கின்ற தடைகள் நீங்க / விரைவில் குழுக்கள் ஆரம்பிக்கப்பட.
5. ஒவ்வொரு மாதமும் வெளிவந்து கொண்டிருக்கின்ற நமது GODependence செய்திமடலானது அநேகருக்கு பிரயோஜனமாக இருக்க.

## GODependence செய்திமடல் பற்றிய கருத்துக் கணிப்பு

**அன்புள்ள வாசகரே,**

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் உங்களுக்கு எம் அன்பின் வாழ்த்துதல்கள்!

கடந்த 10 மாதங்களாக (இந்த மாதம் உட்பட), GODependence செய்திமடல் முறையான பைபிள் வாசிப்பை ஊக்குவிப்பதற்கும், துதிக் குறிப்புகளைப் பகிர்ந்து கொள்வதற்கும், ஜெபம் மற்றும் சாட்சிகள் மூலம் நமது ஐக்கியத்தை பலப்படுத்துவதற்கும் ஒரு தாழ்மையான முயற்சியாக இருந்து வருகிறது.

முன்னோக்கிப் பார்க்கும்போது, நாங்கள் இந்த செய்திமடலை மேம்படுத்த விரும்புகிறோம் - **உங்கள் கருத்து எங்களுக்கு மிகவும் முக்கியமானது**. இந்த சிறிய கருத்துக்கணிப்பு உங்கள் நேரத்தின் ஒரு சில நிமிடங்களை மட்டுமே எடுத்துக்கொள்ளும், ஆனால் வரும் நாட்களில் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் சிறப்பாக சேவை செய்ய இது எங்களுக்கு உதவும்.

நீங்கள் ஒரு வழக்கமான வாசகராக இருந்தாலும் அல்லது இப்போதுதான் வாசிக்கத் தொடங்கினாலும், உங்கள் நேர்மையான எண்ணங்கள், பரிந்துரைகள் மற்றும் ஊக்கம் எங்களை முன்னோக்கி வழிநடத்தும்.

நீங்கள் இதுவரையும் இந்த கருத்துக்கணிப்பில் பதிலளிக்கவில்லை எனில், பதிலளிக்க வேண்டுகிறோம். நீங்கள் உங்கள் அடையாளத்தைக் குறிப்பிடாமலேயே கூட, இங்கே கொடுக்கப்பட்ட இணைப்பில் பதிலளிக்கலாம்: https://forms.gle/nkzaJvD7rBrYahKW9

இந்த பயணத்தின் ஒரு பகுதியாக நீங்கள் இருப்பதற்கு நன்றி. தொடர்ந்து நாம் தேவனைச் சார்ந்து நிற்போம்!

கிறிஸ்துவின் அன்பில்,

**ஆசிரியர் குழு**
GODependence செய்திமடல்.

https://forms.gle/nkzaJvD7rBrYahKW9

உலகளாவிய கவனம் பெறத் தகுதியுள்ள புத்தகங்களில் முதன்மையான புத்தகம் பரிசுத்த வேதாகமமே ஆகும்.
- ஜான் குயின்சி ஆடம்ஸ்

## 📕 வேதவாசிப்பு சவால்கள் - 01 செப்டெம்பர் 2025 முதல் 📕

"இயேசுவின் வார்த்தைகளை நேசிக்காமல் நீங்கள் அவர் மீது நேசம் கொள்ள முடியாது." - ஜே.சி. ரைல். உங்களுக்கு வசதியான நேரத்திலும் வேகத்திலும் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நாங்கள், GODependence உங்களுக்கு உதவுகிறோம்.




**நமது வேதவாசிப்பு சவால் பங்கேற்பாளர்கள் சிலரது அனுபவ சாட்சிகள் பின்வருமாறு:**

👩‍🦳♀️ GODependence சவால்களில் கலந்து கொள்வதற்கு முன்பு தனியாக முழு வேதாகமத்தயும் வாசித்து முடிக்க நினைக்கும்போது முழுமையாக முடிக்கவில்லை. கர்த்தருடைய கிருபையினாலும் இந்த வேத வாசிப்பு திட்டத்தினாலும் என்னால் இதுவரை ஏழு முறை முழுமையாக வாசிக்க முடிந்தது. மிகவும் சந்தோஷமாக உள்ளது. - R. Parameshwari

👩‍🦳♀️ வேதாகமத்தை வாசிக்க வாசிக்க இன்னும் ஆர்வத்தோடு வாசிக்க நினைக்கிறேன். அத்தகைய வாஞ்சையை தேவன் கொடுத்து இருக்கிறார். அதற்காக முதலாவது தேவனுக்கும் GODependence குழுவின் அனைத்து சகோதர சகோதரிகளுக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கிறேன். - D.H. Jeba Selvi

👩‍🦳♀️ வாலிப காலத்தில் முழு வேதாகமும் வாசித்தது போன்று இப்போதும் வாசிக்க வேண்டுமென்று ஆர்வம் உண்டு; ஆனால் முடியவில்லை. நீங்க கொடுத்த முறைப்படி ஒரே மாதத்தில் முழு வேதாகமமும் வாசிக்க எளிமையாக இருந்தது. - R. Jenita Abirami

உங்கள் வேதவாசிப்பு முயற்சிகளில் உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா? ஆம் எனில், 01 செப்டெம்பர் 2025 முதல் தொடங்கும் "வேத வாசிப்பு சவால்களுக்கு" GODependence உங்களை அன்புடன் அழைக்கிறது.

.**இதன் சிறப்பு அம்சங்கள்:**

✴ வேதவாசிப்பு சவாலின் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]

✴ 10 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி]

✴ முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேதவாசிப்புப் பகுதி.

✴ வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.

✴ வேதவாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.

✴ வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!

✴ அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.

✴ பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

👉 எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்பு சவால்களில் ஒன்றில் சேர்ந்துகொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு காலஅளவுத் திட்டம் மற்றும் மொழி_யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் _பெயர் (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் வயதை இந்த இணைப்பில் https://wa.me/96565962559 கிளிக் செய்து, +965 6596 2559 என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். 🙏

**https://wa.me/96565962559**

⁚ **GODependence குழு**

**** ☝ இந்த செய்தியை உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் உங்கள் சபை உறுப்பினர்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்... இதனால் அவர்களும் வழக்கமாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வரலாமே!

**இந்த உலகத்தில் எப்போதும் இருந்த அல்லது இனிமேலும் இருக்கப்போகிற புத்தகங்களிலேயே மிகச் சிறந்த புத்தகம் பரிசுத்த வேதாகமம். – சார்லஸ் டிக்கின்ஸ்**

வேதப்பகுதி: எபேசியர்

# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 10

QUIZ!


குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

## கொடுக்கப்பட்டுள்ள படங்களிலிருந்து எபேசியர் வசனங்களைக் கண்டறியவும்

1. 


2. 


3. 

4. 


5. 

6. 

7. 

8. 

9. 

10. 

https://forms.gle/oaDZcwpFcwUyKMzU9

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 05 /09/2025 க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## GODependence சமூக ஊடக தளங்கள்

### GODependence WhatsApp Channel

JOIN NOW!

இது தமிழில் GODependence இன் அதிகாரப்பூர்வ whatsapp சேனல்.

தினமும் வேதாகமம், வேதவாசிப்பு குறித்த மேற்கோள்கள் மற்றும் அவ்வப்போது வேதவாசிப்பு சவால்கள் குறித்த மற்றும் பிற அறிவிப்புகள் பெற விரும்பினால், நமது தமிழ் சானலை follow பண்ணுங்கள்... நன்றி.

CLICK HERE https://whatsapp.com/channel/0029Va8tCqzC6ZvpLu3JBj3R




### GODependence YouTube Channel

GODependence தமிழ் சேனல்
1.2K சந்தாதாரர்களையும்
265 வீடியோக்களையும் எட்டியுள்ளது

CLICK HERE https://youtube.com/@godependencetamil







### ஆசிரியர் குழு

- பேதுரு தேவதாசன்
- அற்புதராஜ் சாமுவேல்
- ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்
- ஏ. ஆர். பீட்டர்
- டெ. டென்சிங்
- டார்வின் நேசகுமார் அ
- ஷோபா தானியேல்
- ஜோசஃபீன் ஷைனி பால்
- கேதரின் சுஜி

### GODependence வேதவாசிப்பு சவால்கள் தொடர்பு எண்கள்:

பல்வேறு மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்களுக்காக GODependence பின்வரும் தொடர்பு எண்களை பயன்படுத்துகிறது.

நீங்கள் எந்த மொழியில் வேதவாசிப்பு சவாலில் சேர விரும்புகிறீர்களோ, அதற்குரிய எண்ணில் தொடர்பு கொண்டு குழுவில் சேரலாம்.


தமிழ் - +965 6596 2559

ஆங்கிலம் - +91 95255 95265

பிற மொழிகள் - +91 99628 34944

(ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி)

பரிசுத்த வேதாகமத்தை வாசிப்பதினால் நான் மிக அதிக பலனடைந்திருக்கிறேன். நீங்கள் பகுத்துணரவும் விசுவாசத்தினால் ஒரு சமநிலை வாழ்வை வாழவும் இந்தப் புத்தகத்தில் உள்ள அனைத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் ஒரு சிறந்த மனிதனாக வாழ்ந்து மரிப்பீர்கள். - ஆபிரகாம் லிங்கன்



## உங்களுக்குத் தெரியுமா?

### ஒரு மனிதனின் உயிர் எங்கே இருக்கிறது?

**பல நூற்றாண்டுகளாக இது ஒரு மர்மமாகவே இருந்தது.**

18 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில், பல நோய்களுக்கு உடலிலுள்ள கெட்ட இரத்தம்தான் காரணம் என்று நம்பப்பட்டது. இரத்தத்தை வெளியேற்றுதல் நோய்களைக் குணப்படுத்தும் என்று அவர்கள் நம்பினர். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் நோய்வாய்ப்பட்டிருந்த போது, மருத்துவ நடைமுறையின் ஒரு பகுதியாக 1799 டிசம்பர் 14 ஆம் தேதி அவரது இரத்தத்தில் நாற்பது சதவீதம் எடுக்கப்பட்டது.


ஒரு மனிதனின் உயிர் எங்கே அடங்கியுள்ளது என்பதை பைபிள் வெளிப்படுத்தியுள்ளது. "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது." (லேவியராகமம் 17:11, பைபிள்). இது கிமு 1430 இல் எழுதப்பட்டது. இந்த மருத்துவ உண்மையை ஆசிரியர் எப்படி இவ்வளவு துல்லியமாக அறிய முடியும்? ஏனென்றால் மனிதகுலத்தைப் படைத்தவர் இந்த அறிவை எழுத்தாளரின் மனதில் பதிய வைத்தார்.

வேதாகமம் அதன் எழுதப்பட்ட காலத்தை விட உயர்ந்த அறிவை வழங்குகிறது. பரிசுத்த வேதாகமம் என்று அழைக்கப்படும் இந்த அற்புதமான புத்தகத்தை நீங்கள் படிக்க விரும்புகிறீர்களா?




**எலிசா தீர்க்கதரிசி இரும்பை தண்ணீர் மீது மிதக்க செய்தார் என்று உங்களுக்கு தெரியுமா? 2 ராஜாக்கள் 6: 5-7**

**ஏதேன் தோட்டத்தில் உருவான ஜீவ மரம், புதிய எருசலேமில் ஒவ்வொரு மாதமும் கனிதரும் மரமாக காணப்படுகிறது என்பது உங்களுக்கு தெரியுமா? வெளி 22:2**




## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 9 மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 9 இல் பங்கு பெற்று சரியான பதில்களை அனுப்பிய நபர்களின் பெயர்கள் மற்றும் சரியான பதில்கள்

**வேதப்பகுதி: கலாத்தியர்**

### வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 9

➡️ இடமிருந்து வலம்
1. சுவிசேஷம் (1:7)
3. யூதன் (3:28)
4. தீத்து (2:3)
5. கிறிஸ்து (2:20)
6. கிரியை (5:6)
10. ஈசாக்கு (4:28)
13. சாபம் (3:13

⬇️மேலிருந்து கீழ்
1. சுயகிரியை (6:4)
12. ஆவி (5:17)

⬆️கீழிருந்து மேல்
7. பேதுரு (2:7)
11.வைராக்கியம் (4:18)
12. ஆபிரகாம் (3:29)
14. பர்னபா (2:13)

⬅️ வலமிருந்து இடம்
2. எருசலேம் (1:18)
8. யாக்கோபு (2:9)
9. அழிவு (6:8)
12.ஆகார் (4:24)
14. பரியாசம் (6:7)

**சரியான பதில்களை அனுப்பிய முதல் 10 நபர்கள்:**

- ஆர் ஜோசபின்
- எஸ். கெரன் ஹெப்சிபா
- ஜூலி கேத்ரின்
- அ.ஜாய்ஸ் செல்லத்துரை
- ரெய்ச்சல் அமுதவல்லி
- ஜினிஷா
- சி.வி க்ரீட்லின் பிளெஸி
- விஜிலா
- எஸ்.கனிச்சுவை
- கிறிஸ்டி ஜோசப்

### விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 9

**கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கொண்டு கலாத்தியரில் வரும் வசனங்களை கண்டுபிடி.**

1)கலாத்தியர் 5:22,23
2)கலாத்தியர் 2:9
3)கலாத்தியர் 2:20
4)கலாத்தியர் 3:3
5)கலாத்தியர் 3 - 28
6)கலாத்தியர் 4:10
7)கலாத்தியர் 4 - 19
8)கலாத்தியர் 5:14
9)கலாத்தியர் 6:9
10)கலாத்தியர் 6:2

**சரியான பதில்களை அனுப்பிய 5 நபர்களின் பெயர்கள் :**

- பானுப்ரியா எஸ்
- ரெய்ச்சல் அமுதவல்லி
- அ.ஜாய்ஸ் செல்லத்துரை
- கிறிஸ்டி ஜோசப்
- நிர்மலா பெனியல்

**பரிசுத்த வேதாகமத்தை தியானம் செய்யாமல் வாசிப்பது என்பது உணவை மென்று சாப்பிடாமல் அப்படியே விழுங்குவதற்கு முயற்சிப்பதைப் போன்றதாகும்.**

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

31 ஜூலை 2025 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்பு சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்



















தேவனுடைய மனதில் என்ன இருக்கிறது என்பது வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது; எனினும், பரிசுத்த ஆவி எனும் கண்ணாடி இல்லாமல் நாம் அதில் எதையும் பார்க்க முடியாது. - தாமஸ் மன்டன்

யோப்பாவில் வாழ்ந்த தபீத்தாள் என்ற பெண்ணின் மனதைத் தொடும் கதையை இங்கே வாசிக்கிறோம். அவள் ஒரு விதவையா அல்லது மணமாகாதவளா என்று வேதம் சொல்லவில்லை. அவள் இயேசு கிறிஸ்துவின் சீஷியாக, எப்போதும் நன்மை செய்து, ஏழைகளுக்கு உதவி செய்து வந்தாள்.

தபீத்தாள் இறந்தபோது, அப்போஸ்தலன் பேதுரு அவளுடைய வீட்டிற்கு வரும்படி வற்புறுத்தப்பட்டார். அவர் வந்தபோது, எல்லா விதவைகளும் அவரைச் சுற்றி நின்று அழுது, அவர்களுக்காகத் தபீத்தாள் தயாரித்த அங்கிகளையும் மற்ற ஆடைகளையும் காட்டினர். பேதுரு அவர்களை அறையிலிருந்து வெளியே அனுப்பி, முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: "தபீத்தாளே, எழுந்திரு" என்றார். பின்னர் தபீத்தாள் மீண்டும் உயிர் பெற்றாள். இதைப் பார்த்து, பலர் இயேசு கிறிஸ்துவை நம்பினர்.

**இன்று தபீத்தாள் நமக்கு எப்படி உத்வேகம் அளிக்கிறார்?**

- ஆடைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான துணியை வாங்க தபீத்தாளிடம் வளங்கள் இருந்தன. ஆடைகளைத் தயாரிக்கும் திறமையும் அவளுக்கு இருந்தது. அவற்றை விற்று அவள் நிறைய பணம் சம்பாதித்திருக்கலாம், ஆனால், அந்த நாட்களில் உதவியற்றவர்களாகவும் பாதிக்கப்படக்கூடியவர்களாகவும் இருந்த விதவைகளுக்குக் கொடுத்தாள். வசதியற்றவர்களுக்கும் ஏழைகளுக்கும் உதவ நமது வளங்களையும் திறன்களையும் பயன்படுத்த தபீத்தாள் நமக்குச் சவால் விடுகிறார்.
- நமது தேவைகளுக்காக நமது பணத்தை செலவிடும் அதே வேளையில், நமது சமூகத்தில் உள்ள குறைந்த சலுகை பெற்ற மக்களையும் நினைவில் கொள்ளவேண்டும். அப்போஸ்தலர் 20:35-ல் அப்போஸ்தலர் பவுல் மேற்கோள் காட்டிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை நினைவில் கொள்வோம், 'வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்'

*ஏழைகளின் தேவைகளைப் புரிந்துகொண்டு அவர்களுக்கு உதவ நாம் தயாரா?*

**– சகோ. பீட்டர் ஏ.ஆர். பாலக்காடு, கேரளா.**

---

## வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 10

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 3 | |
| 4 | | | ■ | ■ | | ■ |
| | | | | 5 | | |
| | 6 | | 7 | | | |
| | 8 | | | 9 | ■ | |
| | | | 10 | | | |
| 11 | | 12 | | | 13 | 14 |

### வேதப்பகுதி: எபேசியர்

**➡️ இடமிருந்து வலம்**

1. கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் வருவது (7)
7. நாம் இரட்சிக்கப்பட்டது தேவனுடைய ____ (2)
10. இயேசு பகையை ____யினால் கொன்றார் (3)

**⬅️ வலமிருந்து இடம்**

5. சபையின்மூலம் தெரியவருவது அநந்த ____(3)
9. தேவன் கிறிஸ்துவுக்குள் கொண்டிருந்தது _____ தீர்மானம் (3)
12. கிறிஸ்துவின் சரீரம் (2)
13. தகாதவைகளில் ஒன்று (3)

**⬇️ மேலிருந்து கீழ்**

2. நீங்க வேண்டியவைகளில் ஒன்று (3)
3. தலை (4)
4. இயேசுவின் இரத்தத்தாலே பாவமன்னிப்பாகிய ____ உண்டாயிருக்கிறது (3)
8. பவுலுக்கு அளிக்கப்பட்டிருந்தது (3)

**⬆️ கீழிருந்து மேல்**

6. _____க்கு இடங்கொடாமலும் இருங்கள் (3)
11. அழைக்கப்பட்ட ____க்கு பாத்திரவான்களாய் நடவுங்கள் (4)
12. கச்சை (5)
14. எஜமான்கள் விட்டுவிட வேண்டியது (5)

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்கவேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

CLICK HERE https://forms.gle/RriAKSDfkpDnMGKk7

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 05/09/2025 க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

பரிசுத்த வேதாகமத்தை விஞ்சி எவரும் வளர்ந்துவிட முடியாது. ஆண்டுகள் செல்லச் செல்ல இப்புத்தகம் விரிவடைந்து அதன் ஆழம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. - சார்லஸ் ஸ்பர்ஜன்

GODependence
True freedom is being dependent on God

# வேத வாசிப்புச் சவால்கள்

## 10* மொழிகளில் 6 விதமான

## வேதவாசிப்புத் திட்டங்கள்

*எமது வேத வாசிப்புச் சவால்கள் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் துவங்குகிறது.

**1 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 45 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
2 மணி 30 நிமிடங்கள்

**2 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 22 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
1 மணி 30 நிமிடங்கள்

**3 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 15 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
60 நிமிடங்கள்

**உங்களுக்கு வசதியான வேதவாசிப்புத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் வசதி**

**4 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 11 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
45 நிமிடங்கள்

**6 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 7 அல்லது 8 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
25 நிமிடங்கள்

**1 வருட வேதவாசிப்புச் சவால்**
தினமும் 3 அல்லது 4 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
15 நிமிடங்கள்

**இன்னும் தாமதம் ஏன்? இன்றே சேருங்கள்.**

தொடர்புக்கு: +965 6596 2559

கீழே கொடுக்கப்பட்ட மாதிரியின் படி வாட்சப்பில் உங்கள் விவரங்களை அனுப்பவும்:
<உங்கள் பெயர்> <வயது> <காலஅளவு> <மொழி>.

*உங்களுக்கு ஏற்ற வேதவாசிப்புத் திட்டம் மற்றும் விருப்பமான மொழியில் எங்கள் வேத வாசிப்புச் சவால்கள் ஒன்றில் நீங்கள் சேரலாம்.

*எங்கள் வேதவாசிப்புச் சவால்கள் ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி மொழிகளில் உண்டு.

பரிசுத்த வேதாகமமானது துவக்கம் முதல் முடிவுவரை கிறிஸ்துவை மையமாக வைத்து வாசிக்கப்படவேண்டும்.
- டெரிக் தாமஸ்

**உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு:**

கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்னுடைய பெயர் கிறிஸ்டி பிரபாகர். என் கணவர் பெயர் பிரபாகர். எனக்கு இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். .

**நீங்கள் இதுவரையும் சராசரியாக எத்தனை முறை பரிசுத்த வேதாகமத்தை முழுவதும் வாசித்திருக்கிறீர்கள்? அவற்றுள் GODependence வேதவாசிப்பு மூலமாக எத்தனை முறை வாசித்திருக்கிறீர்கள்?**

GODependence மூலமாக இரண்டு முறை வேதாகமத்தை வாசித்து முடித்து இருக்கின்றேன். இந்த முறை அதை வாசித்து முடிப்பதற்கு கர்த்தர் கிருபை கொடுத்தார்.வேதாகமத்தை சரியாக தொடர்ச்சியாக வாசிக்க வேண்டும் என எனக்கு ஆசை இருந்தது. அதற்காக இந்த திட்டம் கிடைத்தவுடன் வாசிக்க வேண்டும் என விரும்பினேன். கர்த்தர் எனக்கு இதன் மூலமாக உதவி செய்தார்.

**வாசித்து முடிக்கும்படியாக GODependence குழுவின் நடைமுறைகள் எந்த விதத்தில் உங்களுக்கு உதவின?**

தினமும் அவர்கள் whatsapp வழியாக அதை அனுப்புவதன் மூலமாக தினமும் நமக்கு எவ்வளவு நேரம் தேவைப்படுகிறது என்பதை சரியான முறையில் திட்டமிட பயன்படுகிறது. அந்த திட்டத்தின் படி சரியாக வாசித்து முடிக்கவும் உதவுகிறது.

**நீங்கள் பரிசுத்த வேதாகமம் வாசிக்கும்போது ஏற்பட்ட தடங்கல்கள் என்ன? அவற்றை எவ்வாறு மேற்கொண்டீர்கள்?**

தடைகள் என்னவென்றால் நாம் சில நேரங்களில் வெளியில் செல்வதாலோ அல்லது உறவினர்கள் வீட்டிற்கு வருவதாலோ வாசிக்க முடியாமல் வரும் நேரங்களில் இரவு நேரத்தில் நீண்டநேரம் உட்கார்ந்து நான் வாசித்து முடிப்பேன். அப்படியாக வாசித்து முடிக்க கர்த்தர் உதவினார். அதுபோல நிறைய அதிகாரங்கள் வாசிக்கும் போது ராஜாக்களை குறித்து அல்லது குறிப்பிட்ட காரியத்தை தொடர்ச்சியாக முழுமையாக தொடர்ச்சியாக வாசித்து தெரிந்துகொள்ள கர்த்தர் உதவி செய்தார். தீர்க்கதரிசன புத்தகங்கள் பல புத்தகங்களை தொடர்ந்து வாசிக்கும்போது சில நேரங்களில் அதுவும் சிரமமாக இருந்தது. ஆனால் அதை திரும்பத் திரும்ப வாசிக்கும் போது அதைப்பற்றி புரிந்து கொள்ள கர்த்தர் எனக்கு உதவி செய்தார்.

**இறுதியாக, பரிசுத்தவேதம், வேதவாசிப்பு அதன் அவசியம் குறித்து தமிழ் கிறிஸ்தவ உலகத்திற்கு நீங்கள் ஒரிரு வாக்கியங்களில் சொல்லவிரும்புவது என்ன?**

வேதாகமத்தை கிறிஸ்தவர்கள் கண்டிப்பாக வாசிக்கவேண்டும். முதலாவது வேதம்தான் நம் கால்களுக்கு தீபம் பாதைக்கு வெளிச்சம் அதனால் வேதாகமம் இல்லாமல் நாம் வாழ்ந்தால் இருளில் நடக்கிறவர்கள்போல் காணப்படுவோம். வேதாகமம்தான் நம்முடைய மனமகிழ்ச்சி. அது இல்லாமல் இருந்திருந்தால் என் துக்கத்தில் அமிழந்துபோய் இருப்பேன் என்று தாவீது சொல்வதுபோல, நம் வாழ்க்கையிலும் பல பாடுகள் கஷ்டங்கள் உபத்திரவங்கள் எது வந்தாலும் அதில் அந்த நேரத்தில் வேதாகமத்தை வாசிப்பதன் மூலமாக நம் இருதயத்தில் வரும் மகிழ்ச்சி ஒரு நாளும் மறைந்து போகாது. ஆண்டவர் வரும்போது இந்த வேதாகமத்தை கொண்டுதான் நம்மை நியாயம் தீர்ப்பார். அதில் என்ன இருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொண்டால் அதன்படி நாம் நடந்து கர்த்தருக்கு முன்பதாக சந்தோஷமாக, தைரியமாக நிற்க அது நமக்கு கிருபை பாராட்டும். GODependenceமூலமாக இருமுறை வாசித்து முடித்து இருக்கிறேன். தற்போது மூன்றாவது முறை வாசித்துக் கொண்டிருக்கிறேன் கர்த்தர் எனக்கு கொடுத்திருக்கிற நல்ல வாய்ப்புக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். GODependence-க்கு என்னுடைய நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். Thank you very much.

**மேலும் சாட்சிகளுக்கு கீழ்க்கண்ட YOUTUBE இணைப்புகளை கிளிக் செய்து பார்க்கவும்**

வேதமும் நானும்;வேதத்தோடு இருக்கிற அனுபவமும், எனக்குள் மாற்றத்தை ஏற்படுத்தினது — PR. K. PAUL MANOHARAN

கையிடும் வேலை ஆசிர்வதிக்கப்பட கையிலே வேதாகமம் எடுத்து வாசித்தேன் . — JAYAMARY VIJAY KUMAR

முரண்பாடுகள் உள்ளதாக இருக்கிறது என்பதினால் அல்ல, மனிதர்களுக்கு முரணானதாக இருப்பதால் அவர்கள் பரிசுத்த வேதாகமத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். - E. பால் ஹோவி

# எபேசியர்

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 60- கி.பி. 62
**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.பி. 60
**நூலின் ஆசிரியர் :** அப்போஸ்தலனாகிய பவுல்
**புத்தக வகை :** கடிதங்கள்

## நூல் அறிமுகம்

எபேசியர் கடிதம் மிகவும் சிறந்த கருத்துக்களைத் தன்னுள் கொண்டுள்ளது. திருச்சபை பற்றிய அழகான உருவகங்களை அது நமக்குத் தருகிறது. தேவனின் திட்டம் என்பது மனித குலத்தை மட்டுமல்ல, படைப்பு அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில் தேவனுடன் ஒப்புரவாக்குது என்னும் உயரிய கருத்தை இக்கடிதம் எடுத்துரைக்கிறது. குடும்பவாழ்வு பற்றிச் சிறந்த அறிவுரைகளையும் வழங்குகிறது. இது கொலோசெயர் கடிதத்துடன் நெருங்கிய தொடர்புடையது. பலர் இதனைக் கொலோசெயர் கடிதத்தின் விளக்கமாகக் கருதுகின்றனர்.

## சூழலும் நோக்கமும்

ரோமானிய சிறையிலிருந்து எழுதும் பவுல், கிறிஸ்துவைப் போன்ற முதிர்ச்சிக்காக ஏங்கும் அனைவரும் இந்த எழுத்தைப் பெறுவார்கள் என்று எண்ணினார். தேவன் கொடுத்த நோக்கத்தையும் அழைப்பையும் நிறைவேற்ற விசுவாசியை பலப்படுத்தவும் நிலைநிறுத்தவும் எபேசியர் உதவுகிறது. இந்த கடிதத்தின் நோக்கம் ஒரு முதிர்ச்சியடைந்த திருச்சபையை உறுதிப்படுத்துவது ஆகும்.

## முக்கிய வசனங்கள்

எபே 1:3, எபே 2:8-10, எபே 4:4-6, எபே 5:21, எபே 6:10-11

## புத்தகத்தின் சுருக்கம்

இந்த கடிதத்தில் உள்ள போதனைகளில் பாதி கிறிஸ்துவில் நம் நிலைப்பாட்டுடன் தொடர்புடையது. பெரும்பாலும் இந்தப் புத்தகத்தில் இருந்து கற்பிப்பவர்கள் அனைத்து அடிப்படை அறிவுறுத்தல்களையும் கடந்து நேரடியாக இறுதி அதிகாரத்திற்கு செல்கிறார்கள். இந்த அதிகாரம் தான் பரிசுத்தவான்களின் போர் அல்லது போராட்டத்தை வலியுறுத்துகிறது. எவ்வாறாயினும், இந்த கடிதத்தின் உள்ளடக்கங்களிலிருந்து முழுமையாக பயனடைய, இந்த கடிதத்தின் முதல் அதிகாரத்திலிருந்து தொடங்கவேண்டும். முதலில், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக, தேவன் நம்மை யார் என்று அறிவிக்கிறார் என்பதை நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும். அடுத்ததாக, நமது தற்போதைய இருப்பும் நடையும் பயிற்சி செய்யப்பட்டு வலுப்பெற வேண்டும். மனிதர்களின் போதனையினால் நாம் முன்னும் பின்னுமாக தள்ளாடவோ கூடாது.பவுலின் எழுத்து மூன்று முக்கிய பிரிவுகளாக இருக்கிறது (1) அதிகாரம் ஒன்று முதல் மூன்று வரை தேவனின் சாதனையைப் பற்றிய கொள்கைகளை அறிமுகப்படுத்துகிறது. (2) நான்கு மற்றும் ஐந்து அதிகாரங்கள் நமது தற்போதைய இருப்பைப் பற்றிய கொள்கைகளை முன்வைக்கின்றன. (3) ஆறாம் அதிகாரம் நமது அன்றாடப் போராட்டத்தைப் பற்றிய கோட்பாடுகளை முன்வைக்கிறது. இக்கடிதத்தின் முதற்பகுதியில் ஒற்றுமை பற்றிய மையக் கருத்தை ஆசிரியர் விளக்குகின்றார்; பிதாவாகிய தேவன் தம் மக்களை எப்படி அழைத்துள்ளார் என்றும், அவர்கள் எவ்வாறு தம் மகன் இயேசு கிறிஸ்துவினால் மன்னிக்கப் பெற்று, பாவத்திலிருந்து விடுதலை பெற்றார்கள் என்றும், தேவனின் பரிசுத்த ஆவியால் எவ்வாறு உறுதிப்படுத்தப்படுகின்றார்கள் என்றும் கூறுகிறார் (1-3). இரண்டாம் பகுதியில் வாசகர்கள் கிறிஸ்துவுடன் கொண்டுள்ள உறவைத் தங்கள் வாழ்வில் காட்ட வேண்டும். என்கிறார் ஆசிரியர். பொதுவான சமூக அன்பு வாழ்வும், குடும்ப அன்பு வாழ்வும் இந்த ஒற்றுமையை எடுத்துக் காட்ட வேண்டும் என விருப்பம் தெரிவிக்கின்றார். இக்கடிதத்தில் பல உருவகங்கள் இடம் பெறுகின்றன. திருச்சபை உடலாகவும் கட்டடமாகவும் மணமகளாவும், கிறிஸ்து தலையாகவும் மூலைக்கல்லாகவும் மணமகனாவும் உருவகிக்கப்படுவதைக் காண்கிறோம். கிறிஸ்துவுக்குள் வாழ்தல் பற்றிப் பலமுறை சொல்லப்படுகிறது. தேவனின் கிருபை வலியுறுத்தப்படுகின்றது. அனைத்தும் கிறிஸ்துவின் அன்பு,தியாகம், மன்னிப்பு, கிருபை, பரிசுத்தம் என்னும் அடிப்படையில் பார்க்கப்படுகின்றன.

## புத்தகத்தில் இயேசுகிறிஸ்து

புறஜாதியார் இஸ்ரவேலரோடு வாரிசுகளும், ஒரே சரீரத்தின் அவயவங்களும், கிறிஸ்து இயேசுவுக்குள் வாக்குத்தத்தத்தில் பங்காளிகளுமாக இருக்கிறார்கள்" (எபே 3:6). இது பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களிடமிருந்து முற்றிலும் மறைக்கப்பட்ட ஒரு இரகசியமாக இருந்தது (எபே 3:5, 9). தேவனை உண்மையாகப் பின்பற்றுபவர்களாக இருந்த இஸ்ரவேலர்கள் தாங்கள் மட்டுமே தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்று எப்போதும் நம்பினர் (உபா 7:6). இந்த புதிய முன்னுதாரணத்தில் புறஜாதிகளை சம அந்தஸ்தில் ஏற்றுக்கொள்வது அவர்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது. இது யூத விசுவாசிகள் மற்றும் புறஇனத்தவர்களின் விசுவாசிகளானோரிடையே பல சர்ச்சைகளை ஏற்படுத்தியது. பழைய ஏற்பாட்டில் முன்பு கேள்விப்படாத கருத்தாகிய திருச்சபை"கிறிஸ்துவின் மணமகள்" என்ற இரகசியத்தைப் பற்றியும் பவுல் பேசுகிறார்.

## நடைமுறைப் பயன்பாடு

வேதாகமத்தின் வேறு எந்த புத்தகத்தையும் விட, எபேசியர் புத்தகம் கிறிஸ்தவ வாழ்வின் நல்ல கோட்பாடு மற்றும் சரியான நடைமுறைக்கு இடையே உள்ள தொடர்பை வலியுறுத்துகிறது. பலர் "இறையியலை" புறக்கணித்துவிட்டு, "நடைமுறையில்" உள்ள விஷயங்களை மட்டுமே விவாதிக்க விரும்புகிறார்கள். எபேசியர்களில் இறையியல் நடைமுறைக்குரியது என்று பவுல் வாதிடுகிறார். நடைமுறையில் நம் வாழ்வில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு, நாம் முதலில் கிறிஸ்துவில் கோட்பாட்டின் அடிப்படையில் யார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

## நூலின் அமைப்பு

1)முன்னுரையும் வாழ்த்தும் 1:1 - 2
2) கிறிஸ்துவும் திருச்சபையும் 1:3 - 3:21
3) கிறிஸ்தவப் புதுவாழ்வு 4:1 - 6:20
4) இறுதி வாழ்த்தும் முடிவுரையும் 6:21 - 24



GODDependence
தொகுப்பு: சகோ. A. டார்வின் நேசகுமார்

நம் வாழ்விலும் சிந்தனைகளிலும் வேதாகமத்திற்கு நாம் எந்தளவுக்கு இடம் கொடுக்கிறோமோ அதற்கு சரிநிகராக நம் ஆவிக்குரிய வாழ்வின் பெலன் இருக்கும். - ஜார்ஜ் முல்லர்

1

## GODependence குழுவின் 3வது குடும்பக் கூடுகை - 01 & 02 ஆகஸ்ட் 2025

தேவனுடைய பெரிதான கிருபையால், நமது GODependence குழுவின் 3வது குடும்பக் கூடுகை 01 & 02 ஆகஸ்ட் 2025 ஆகிய நாட்களில் பெங்களூரு Visthar வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

GODependence குழுவின் உறுப்பினர்களில் 18 பேர் தங்கள் குடும்பத்தினருடன் ஐக்கியம், ஆவிக்குரிய புத்தாக்கம் மற்றும் திட்டமிடலுக்காக பல்வேறு மாநிலங்களிலிருந்து ஒன்று கூடினர்.

விரிவான விபரங்கள் அடுத்த இதழில் பகிரப்படும்.



**ஆகஸ்ட் 01 & 02, 2025 அன்று GODependence குழுவின் 3வது குடும்பக் கூடுகை @விஸ்தார் வளாகம், பெங்களூர்.**

2

## GODependence கருத்தரங்கு - ஆகஸ்ட் 2025

**தலைப்பு: ஊடகங்களை நம் குழந்தைகளின் எதிர்காலத்திற்கான பயனுள்ள கருவியாக மாற்றுவது எப்படி?**



(ஊடகங்கள் நம் வாழ்க்கையையும், நம் குழந்தைகளின் எதிர்காலத்தையும் எவ்வாறு வடிவமைக்கின்றன என்பதைப் புரிந்துகொள்வதற்கும், ஆரோக்கியமான வரம்புகளை அமைப்பதற்குமான வழிகாட்டுதலை வழங்கும் ஒரு நேரடி அமர்வு. மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் இருவரும் இந்த நிகழ்வில் பங்கேற்று, அவர்களின் கேள்விகளுக்கு பதில்கள் பெறுவதோடு, விவாதங்கள் மூலம் பயனுள்ள நுண்ணறிவுகளையும் பெறலாம்.)

**நாள்: 24 ஆகஸ்ட் 2025 ஞாயிறு மாலை இந்திய நேரம் 4 முதல் 5 மணி வரை**

3

## வேத தியான குழுக்கள் (BMG) - September 2025 முதல்

தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால், நாம் மீண்டும் தொடங்க திட்டமிட்டிருந்த வேத தியானக் குழுக்கள் (BMG) செப்டம்பர் 2025 முதல் தான் தொடங்கும்.

இதற்கான பயிற்சி குறித்த அறிவிப்புகள் மற்றும் விவரங்கள் ஆகஸ்ட் 2025 இல் வேதவாசிப்பு சவால் குழுக்களுக்கு அனுப்பப்படும்.




FOLLOW US!

GODependence வேதவாசிப்பு சவால்கள்

+965 6596 2559

GODependence - தமிழ் (YouTube)

GODependence - தமிழ் (Facebook)

GODependence - தமிழ் (Instagram)

GODependence (Website)

GODependence (X)

தொடர்பு முகவரி:
**GODependence**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.


**பரிசுத்த வேதாகமத்தில் ஆயிரக்கணக்கான வாக்குத்தத்தங்கள் இருக்கின்றன. இது தேவன் கையெழுத்திட்ட காசோலைகள் அடங்கிய புத்தகம் ஆகும். – F.B. மேயெர்**